Registered as a NewsPaper

பக்கங்கள் - iv

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 ஐப்பசி -21 07-11-2003 வெள்ளிக்கிழமை ஓசை 262



கிளிநொச்சியில்

கணினி மையம்

TCC



கணினி விற்பனையாளரும் திருத்த சேவையாளரும்

சி-8690 யாழ். சாலை, கிளிநொச்சி.


### ரணில் அரசாங்கத்திற்கு புஷ் ஆதரவு

# சனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கைகளால் அமெ.-சிறிலங்கா வர்த்தக உடன்பாடு பாதிப்பு!

## அரசியல் ஸ்திரத்தின் பின்பே உடன்பாடென அறிவிப்பு

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்திற்கும், அவரது சமாதான முயற்சிகளுக்கும் ஆதரவு தெரிவித்துள்ள அமெரிக்க அரசு, இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்ப நிலை காரணமாக அமெரிக்காவிற்கும், சிறிலங்காவிற்கும் இடையிலான வர்த்தக உடன்பாட்டில் கையொப்பமிடுவதை நிறுத்தியுள்ளதோடு இலங்கையில் நிலவும் அரசியல் சூழ்நிலையைப் பொறுத்தே இவ்உடன்பாட்டில் கையொப்பமிடும் எனவும் தெரிவித்துள்ளது.**

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அமெரிக்க விஜயம் குறித்தும், ஜோர்ஜ் புஷ்ஷுடனும் நடந்த சந்திப்புக் குறித்தும் கருத்து வெளியிட்ட வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசிற்கும் அவரது சமாதான முயற்சிகளுக்கும் வலுவான ஆதரவு வழங்கப்படும் என அமெரிக்க சனாதிபதி புஷ் தெரிவித்ததாகக் குறிப்பிட்டார்.

இதேவேளை, இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கான ஆதரவை அமெரிக்கா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

(IV ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய அரசாங்கம் அமைக்க பொ.ஐ. முன்னணி முயற்சி?

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகா தலைமையில் தேசிய அரசை அமைக்கப் பொதுசன ஐக்கிய முன்னணியினர் முயற்சியை மேற்கொண்டுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து சனாதிபதிக்கு மிக நெருக்கமானவர்கள் மாற்று அரசியல் கட்சிகளுடன் பேரம் பேச முற்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து பாராளுமன்ற விவ

(IV ஆம் பக்கம் பார்க்க)

## அமெ.விலிருந்து திரும்பும் ரணிலுக்கு வரவேற்பு வழங்க ஐ.தே.க. ஏற்பாடு

### அலரி மாளிகை வரை பவனி நடத்தவும் திட்டம்

அமெரிக்காவில் இருந்து நாடு திரும்பும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இன்று விசேட வரவேற்பு வழங்கப்படவிருக்கிறது. இன்று முற்பகல் நாடு திரும்பவுள்ள அவருக்கு விமான நிலையத்தில் வைத்து, அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பெருமளவான பொதுமக்கள் வரவேற்பளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனையடுத்து பிரதமர் விமான நிலையத்தில் இருந்து

(IV ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சிகளை முன்னெடுக்க அமெரிக்கா என்னிடம் கோரியது!

## பிரதமர் ரணில் பி.பி.சி.க்குத் தெரிவிப்பு



(லண்டன்)

எனது வாஷிங்டன் பயணம் நல்ல விதமாக அமைந்திருந்தது. சனாதிபதி புஷ்ஷையும் அமைச்சரவை உறுப்பினர்களையும் காங்கிரஸ் சபை உறுப்பினர்களையும் சந்தித்தேன். எந்த சமாதான நடவடிக்கைகளுக்காக மக்கள் எனக்கு வாக்களித்து என்னைத் தேர்ந்தெடுத்தார்களோ அந்த நடவடிக்கைக்கு அமெரிக்கா ஏற்கனவே ஆதரவு தந்துள்ளது. அவர்கள் என்னை சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லச் சொன்னார்கள். அதற்குத் தாங்கள் உதவி செய்வதாகவும் சொன்னார்கள். வர்த்தக உறவுகள் பற்றியும் நாங்கள் விவாதித்தோம். சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் வரும்போது வர்த்தக விடயத்திலும் உதவுவதாக அவர்கள் கூறினார்கள். எனது இந்தப் பயணத்தின் காரணமாக இலங்கைக்கும்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## அவசர கால நிலை குறித்து சந்திரிகா முப்படைத் தளபதிகளுடன் பேச்சு

சனாதிபதி முப்படைத் தளபதிகளுடன் நேற்றுக் கலந்துரையாடலை நடத்தியுள்ளார். இதன் போது அவசரகால நிலையின் கீழ் நாட்டில் சமாதானத்தை நிலைநாட்டக்கூடிய ஏது நிலைகள் குறித்து ஆராயப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சனாதிபதியின் நடவடிக்கை குறித்து வீடு வீடாகச்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவைப் பேச்சாளர் பதவியில் ஜீ.எல். பீரிஸ் தொடர்கிறாரா?

அமைச்சரவைப் பேச்சாளர் பதவியிலிருந்து அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நீக்கப்பட்டுள்ளாரா? இல்லையா? என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளதாக இணையத்தளமொன்று தெரிவிக்கிறது.

வாராந்தம் அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு வியாழக்கிழமைகளில் தகவல் திணைக்கள ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறுவது வழமை. இதில் அமைச்சரவைப் பேச்சாளராக ஜீ.எல்.பீரிஸ் கலந்து கொண்டு தகவல்களை வழங்கிவந்தார்.

ஆனால் நேற்று செய்தியாளர் மாநாட்டு மண்டபத்திற்கு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் செல்ல தகவல் திணைக்கள அதிகாரிகள் அனுமதிக்காததுடன் வாராந்த செய்தியாளர் மாநாடும் நடைபெறவில்லை.

தகவல் திணைக்களம் இப்போது சனாதிபதியின் கட்டுப்பாட்டுக்குள்


(IV ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் ஒரு மனதாகச் செயற்படுகையில் சிறிலங்கா அரசு பிரிந்தே இருக்கிறது!

### டைம்ஸ் ஒப் இந்தியா கூறுகிறது

(டில்லி)

தமிழீழ விடுதலைப்புலிகள் ஒரு மனதாகச் செயற்படும் அதே சந்தர்ப்பத்தில் சிறிலங்கா அரசின் கொள்கை எப்போதும் போல பிரிந்தே இருக்கின்றதென டைம்ஸ் ஒப் இந்தியாவின் ஆசிரியர் தலையங்கம் குறிப்பிட்டுள்ளது. வடக்கு, கடற்புலத்தில் விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் செயற்பாடுகள் சனாதிபதிக்கு, மாத்திரமன்றி இலங்கையின் அயல் நாடுகளுக்கும் கவனத்திற்குரியவிடயமாகவே அமைகிறது என அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்திருக்கிறது.





## கொழும்பில் புதிய சோதனைச் சாவடிகள் அடையாள அட்டைகள் பரிசோதனை

### ஊரடங்கு அமுலாகவும் வாய்ப்பு

(கொழும்பு)

கொழும்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரித்துள்ளன. புதிய புதிய சோதனைச் சாவடிகள் வீதியோரங்களில் படையினரால் அமைக்கப்படுகிறது.

அந்த சோதனைச் சாவடிகளில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரால் வீதியால் செல்லும் மக்களின் அடையாள அட்டைகள் பரிசோதிக்கப்படுகின்றன.

இதேவேளை, எந்த நேரத்திலும் கொழும்பில் அரசியல் ஆதரவாளர்களுக்கிடையில் மோதல் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுவதால் எந்த நேரத்திலும் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்த சந்திரிகா குமாரதுங்க திட்டமிட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஐக்கிய தேசிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது ஆதரவாளர்களுடன் விமான நிலையத்திற்குச் சென்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை வரவேற்கத் திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் கிடைத்திருப்பதாக புலனாய்வுத்துறை அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

கூடுதலான் கட்சி அங்கத்தவர்கள் விமான நிலையத்தில் கூடுவதால் ஏற்படும் மோதல்களை முடிந்தளவு தவிர்ப்பதற்காக ஊரடங்கு சட்டத்தை அமுல் செய்ய வேண்டி ஏற்படும் என புலனாய்வுத்துறை அதிகாரி தெரிவித்தார்.

## வரிவிளம்பரம்

### விதை உழுந்து விற்பனைக்கு

நல்ல ரக விதை உழுந்து விற்பனைக்குண்டு. திருவையாறு விவசாயக் கூட்டுறவுச் சங்கம் கிளிநொச்சி. (3855)


## திறப்பு விழா

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி பிராந்திய உள்ளூராட்சித் திணைக்கள புதிய அலுவலகத்திறப்பு விழா இன்று நடைபெறவுள்ளது.

இன்றுகாலை 10.00 மணிக்கு கிளிநொச்சி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தலைமையில் கிளிநொச்சி கரடிப் போக்குச் சந்திக்கருகாமையில் அமைந்துள்ள கட்டடத்தில் மேற்படி அலுவலகத் திறப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## செயலமர்வு

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது சுகாதார விழிப்புணர்வுச் செயலமர்வு இடம்பெற்று வருகின்றது. யுனிசெவ் நிறுவனத்தின் ஆதரவில் கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் கிளி.மாவட்டத்தில் இயங்கிவரும் உணவு உற்பத்தி மற்றும் விற்பனை நிலைய உரிமையாளர்கள், ஊழியர்களுக்கு அந்தந்தப் பிரதேசங்களில் வைத்து மேற்படி சுகாதாரவிழிப்புணர்வுச் செயலமர்வுகள் இடம்பெற்று வருகின்றன.

மேற்படி செயலமர்வுகள் பளை, கிளிநொச்சி, வட்டக்கச்சிப் பிரதேச உணவு உற்பத்தி மற்றும் விற்பனை நிலைய உரிமையாளர்கள். ஊழியர்களுக்கு அண்மையில் இடம்பெற்றுள்ளதெனவும் மற்றைய பகுதிகளிலுள்ள நிலையங்களுக்குத் தொடர்ந்து மேற்படி செயலமர்வுகள் நடாத்தப்பெறவுள்ளதென கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியக்கலாநிதி சுஜநதன் தெரிவித்துள்ளார். (சோ)

# முள்ளியவளை றோ.க பாடசாலையில் இடவசதியின்மையால் மாணவர் அவதி

(முள்ளியவளை)

முள்ளியவளை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் 5ஆம் தரம், 2ஆம் தரம் மாணவர்கள் இடவசதியின்றி பெரும் அவலப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

மேற்படி பாடசாலையில் போதிய கட்டடவசதி அற்ற நிலையில் பாடசாலை இடமாற்றத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள இந்நிலையில் இடமாற்றம் தாமதமாகி வருகின்றது.

எதிர்வரும் மாதம் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய தரம் 5 மாணவர்களும் மர நிழல்களிலேயே வீதி ஓரமாகக் கல்விகற்று வருகின்றமையை நாளாந்தம் அவதானிக்க முடிகிறது. தற்போது பெய்து வரும் மழையினால் இம்மாணவர்கள் அருகில் உள்ள அன்னை திரேசா ஆலயத்தில் மழைக்கு ஒதுங்கிக்கொள்கின்றனர். மழை ஓய்ந்ததும் மீண்டும் கல்வியைத் தொடர்கின்றனர். (ஆ)

## சனாதிபதி நிதியத்திலிருந்து யாழ்.பல்கலைக்கு குறைந்தளவு நிதி

(யாழ்ப்பாணம்)

சனாதிபதி நிதியத்தில் இருந்து பல்கலைக்கழகங்களுக்கான நிதி ஒதுக்கீட்டு நடைமுறையில் யாழ்.பல்கலைக் கழகம் மிகமோசமாகப் புறக்கணிப்புச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2001,2002,2003 ஆகிய ஆண்டுகளில் செய்யப்பட்ட இந்நிதி ஒதுக்கீட்டில் பேராதனைப் பல்கலைக்கழகம் 2539.2 மில்லியனும், ஜெயவர்த் தனபுரப் பல்கலைக்கழகம் 1392.4 மில்லியனும், கொழும்பு பல்கலைக் கழகம் 1381.8 மில்லியனும், மொறட்டுவப் பல்கலைக்கழகம் 1072.1 மில்லியனும், றுகுணு பல்கலைக்கழகம் 860 மில்லியனும் களனிப் பல்கலைககழகம் 1051.7 மில்லியனும், சப்பிரகமுவ பல்கலைக்கழகம் 291.5 மில்லியனும்,பௌத்தாபி பல்கலைக்கழகம் 67.4 மில்லியனும, கிழக்குப் பல்கலைக்கழகம் 450.2 மில்லியனும், ரஜரட்டைப் பல்கலைக்கழகம் 450 மில்லியனும் வயகம்பா பல்கலைக் கழகம் 341.6 மில்லியன் ரூபாய்களையும் பெற்றிருக்கின்ற போதும் யாழ்.பல்கலைக்கழகத்திற்கு இந்நிதி ஒதுக்கீட்டில் 1 மில்லியன் ரூபா மட்டுமே கிடைக்கப்பெற்றுள்ளது. (33)

## வீதித்திருத்த வேலைகளை 15ஆம் திகதிக்கு முன் பூரணப்படுத்துக!

### - கிளி. அரச அதிபர் வேண்டுகோள்

(கண்டாவளை)

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் உலக உணவுத் திட்ட மூலம் புனரமைப்புச் செய்யப்பட்டு வரும் கிராம வீதிகளை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் வீதி திருத்த வேலைகள் முடிவடைய வேண்டுமெனவும் குறிப்பிட்ட தினத்திற்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் வீதி திருத்த வேண்டுகைகளுக்கு உணவுப்பொருட்கள் வழங்கப்படமாட்டாது என கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் கண்டாவளைப் பிரதேச செயலருக்கு அறிவித்துள்ளார்.

எனவே சம்பந்தப்பட்ட பகுதி மக்கள் தமது முழு ஒத்துழைப்புடன் வீதிப் புனரமைப்பு வேலைகளைத் துரிதப்படுத்துமாறு பிரதேச செயலர் பி.கா.மத்தியாஸ் அறிவித்துள்ளார். (14)

## ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் விவசாயிகளுக்கு மானியம் வழங்கல்

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையப் பகுதிக்குள் உள்ள விவசாயிகளுக்கு உலக விவசாய ஸ்தாபனத்தின் நிதியுதவியுடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தினர் மானியம் வழங்கியுள்ளனர்.

700 குடும்பங்களுக்கு தலா 5000 ரூபா வீதம் நெற் செய்கைக்கும் 300 குடும்பங்களுக்கு உழுந்து செய்கைக்கும் தலா 2500 ரூபா வீதம் 200 குடும்பங்களுக்கு உப உணவு செய்கைக்கும், 25 குடும்பங்களுக்கு சோளன் செய்கைக்கும் 200 குடும்பங்களுக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது. (05)

## முன்பள்ளி விளையாட்டுவிழா

வடமராட்சி கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தின் கீழ் இயங்குகின்ற உடுத்துறை, செம்பியன்பற்று ஆகிய இரு கிராமங்களில் உள்ள முன்பள்ளிகளின் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன. அதன்படி உடுத்துறை முன்பள்ளியின் விளையாட்டுப்போட்டி 12ஆம் திகதியும் செம்பியன்பற்று முன்பள்ளியின் விளையாட்டுப்போட்டி 13ஆம் திகதியும் நடைபெறவுள்ளன என்று அபிவிருத்திப்புனர்வாழ்வுக்கழக வடமராட்சி கிழக்கு இணைப்பாளர் சிவஞ்ஞானம் தெரிவித்தார். (11)

## கோசல்யாவின் கதைகள்,கவிதைகள் இன்று வெளியீட்டு விழா

(அலுவலக செய்தியாளர்)

புலம்பெயர்ந்த புதல்வியின் தாய் மண்ணின் வெளியீடான "கோசல்யாவின் கதைகள், கவிதைகள்" நூல் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 3.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் செல்வி பூவிழி தலைமையில் கிளி/இராமநாதபுரம் மகாவித்தியாலய மண்டபத்தில் மேற்படி நூல் வெளியீட்டுவிழா இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## ஐஸ் தொழிற்சாலையைப் பயன்படுத்த அனுமதிக்குமாறு கோரிக்கை

### - இராணுவத்திடம் யாழ். மீனவ சங்கம் விடுத்தது

யாழ்.இராணுவ அதியுயர் பாதுகாப்புவலய நடைமுறையால் உள்வாங்கப்பட்டுள்ள 16இற்கு மேற்பட்ட ஐஸ்கட்டித் தொழிற்சாலைகளையும் இயங்கச்செய்து மீனவ சமூகத்தின் பாவனைக்கு விடுமாறு வட மாகாண கடற்தொழிலாளர் சங்கம் படைத்தரப்பிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மேற்படி தொழிற்சாலைகள் முடக்கப்பட்டுள்ளதால் யாழ். குடாநாட்டில் பிடிக்கப்படும் கடலுணவுகளைப் பதப்படுத்திவைப்பதற்கு ஏற்ற அளவில் ஐஸ் கட்டிகளை உற்பத்திசெய்யமுடியாத சூழ்நிலையில் மீனவ சமூகத்தின் வருவாய் பாதிப்படைந்து வருவதைச் சுட்டிக்காட்டியே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## மாவீரர் தினத்தை முன்னிட்டு 5 ஏக்கரில் பனம்விதை நடுகை

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பனம் விதைகள் ஐந்து ஏக்கரில் நாட்டப்பட்டுள்ளன.

மாவீரர் தினத்தை முன்னிட்டு கடந்த 4ஆம் திகதி ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரும் ஒட்டுசுட்டான் பனைதென்னை வள கூட்டுறவுச் சங்கத்தினரும் இணைந்து கூழாமுறிப்பு கிராமத்தில் ஐந்து ஏக்கருக்கு பனம் விதைநாட்டியுள்ளனர்.

இதில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பிரதேச இணைப்பாளர் பனைதென்னை வள கூட்டுறவுச் சங்கத் தலைவர் முகாமையாளர் மக்கள் என்போர் கலந்து இந்நிகழ்வை சிறப்பித்துள்ளனர். (05)

## பாலம் புனரமைப்பால் பாதை மாற்றம்

புதுக்குடியிருப்பு, முள்ளியவளை வீதியில் அமைந்துள்ள பாலம் புனரமைப்புப் பணி நேற்று முன் தினம் தொடக்கம் ஆரம்பித்துள்ளதால் அவ்வீதியால் செல்லும் பேருந்துகள் அனைத்தும் முல்லைத்தீவு ஊடாகவே முள்ளியவளை செல்கின்றது.

மழை காரணமாக அவ்வீதியில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட பாலங்கள் இடியும் நிலை யில் காணப்படுவதாலேயே மேற்படி பாலம் புனரமைப்பு நடைபெறுகின்றது.

## கால்நடைகளை கட்டுப்படுத்தக் கோரிக்கை

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் 2003/2004ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்செய்கை பாரியளவில் மேற்கொள்ளப்பட்டிருப்பதனை முன்னிட்டு, புதுக்குடியிருப்பு பிரதேசத்தினுள் அடங்கும் பதினான்கு (14) கமக்கார அமைப்புக்களும், புதுக்குடியிருப்புப் பிரதேச கமநல அபிவிருத்தித் திணைக்களமும் முல்லை. மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து நேற்று முதல் கால்நடைக் கட்டுப்பாட்டினைத் தீவிரமாக மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதால், அனைத்துக் கால்நடை வளர்ப்போரும் தமது கால்நடைகளைக் கட்டுப்பாட்டு டன் மேய விடுமாறு பொருண்மியச் செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விளையாடச் சென்ற சிறுவனை காணாமை குறித்து முறையீடு

விளையாடச் சென்ற சிறுவனை காணாததால் பதற்றமடைந்த பெற்றோர் மனித உரிமை கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

நேற்று முன் தினம் நடைபெற்ற இச்சம்பவத்தில் சுண்டுக்குழி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பேணாட் டிலக்ஷன் (வயது-15) என பவரே காணாமற் போனவராவார்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் பயின்றுவரும் பிரஸ்தாபச் சிறுவன் வழமைபோல் சம்பவதினத்தன்றும் பாடசாலை மைதானத்திற்கு விளையாடச் சென்றவர் நேற்று வரை வீடு திரும்பவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சம்பவம் நடைபெற்ற கொழும்புத்துறைப் பிரதேசம் மக்கள் நடமாட்டம் குறைந்ததும், இராணுவ நடமாட்டம் அதிகமான இடம் என்பதும் குறிப்பிடத்தக்கது. (33)

## வெடிப்பொருட்களைப் பரீட்சித்த மூன்று இளைஞர்கள் காயம்!

கடந்த 26.ஆம் திகதி ஆழியவளைப் பகுதியில் வெடிக்கும் நிலையிலிருந்த வெடிபொருள் ஒன்றை எடுத்து பரீட்சித்தபோது மூன்று இளைஞர்கள் அது வெடித்ததில் படுகாயமடைந்தனர். வெடிபொருளை பிரித்துப்பார்த்த கணேசலிங்கம் பத்மராசா (வயது-24) என்பவரது இடது கையில் இரு விரல்கள் துண்டிக்கப்பட்டதுடன் முகத்திலும் காயமடைந்தார். அடுத்து பாக்கியநாதன் ரவிச்சந்திரன் (வயது-16), முத்தையா பார்த்தீபன் (வயது-20) என்பவர்களில் ஒருவர் கண்ணிலும் மற்றயவர் இரு கால்களிலும் காயமடைந்தனர்.(11)


## சேரன் வாணிபம்

## பணிநிலைவெற்றிடம்

**01. பணிநிலை** :- எழுதுநர் பயிலுநர் [ஆண்]

**தகைமைகள்**:- தமிழ்,கணிதம், வர்த்தகம் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தியுடன்,ஆறுபாடங்களில் சித்தி அடைந்திருத்தல்வேண்டும்.

**அகவை** :- 20 - 30 அகவை உடையவராக இருத்தல் வேண்டும்.

**கொடுப்பனவு** :- பயிற்சிக்காலத்தில்ஊக்குவிப்புக் கொடுப்பனவாக ரூபா2,000/=வழங்கப்படும்.

**பயிற்சிக்காலம்** :- மூன்று மாதங்கள்

**02. பணிநிலை** :- வெதுப்பக உற்பத்தியாளர் பயிலுநர் [ஆண்]

• புதிய தொழில்நுட்பப் பொறித்தொகுதிகளில் பயிற்சிகள் வழங்கப்படும்.

**தகைமைகள்**:- தமிழ்,விஞ்ஞானம், கணிதம் உட்பட ஆறுபாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

**அகவை** :- 20 - 30 அகவை உடையவராக இருத்தல்வேண்டும்.

**கொடுப்பனவு** :- பயிற்சிக் காலத்தில் ஊக்குவிப்புக் கொடுப்பனவாக ரூபா 2,000/= வழங்கப்படுவதுடன்,தங்குமிட வசதியும் ஒழுங்குசெய்யப்படும்.

**பயிற்சிக்காலம்** :- ஆறு மாதங்கள்.

வேண்டுகைகள் சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்ட, தனி விளக்கங்கள் அடங்கிய படிவத்தில் பூர்த்தி செய்து 2003.11.12ஆம் நாள் புதன்கிழமைக்கு முன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு தபாலிலோ அல்லது பணிமனை பணிநேரத்தில்நேரிலோ அனுப்பி வைக்கப் படல்வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் எழுதுநர் வெதுப்பக உற்பத்தியாளர் பயிலுநர் பணிநிலைக்கான விண்ணப்பப் படிவம் என எழுதப்பட வேண்டும்.

ஆளுகை,
சேரன் வாணிபம்,
நடுவப்பணிமனை,
யாழ்.வீதி,கிளிநொச்சி.

(சி-8694)

# புலிகளின் இடைக்கால த. அ. சபை பற்றி புஷ்ஷிற்கு ரணில் விபரிப்பு

(லண்டன்)

பிரதமர் நேற்று முன்தினம் அமெரிக்க சனாதிபதியைச் சந்தித்துப் புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை பற்றிக் கூறியுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடி காரணமாக அவர் இச்சந்திப்பை இரத்துச் செய்து விட்டு நாடு திரும்புவார் என எதிர்பார்க்கப்பட்டபோதிலும் குறிப்பிட்டவாறு சந்திப்பு நடைபெற்றுள்ளது. சந்திப்பின் பின்னர் பேசிய ரணில் சமாதானத்தைக் கொண்டு வருவதற்கு மக்கள் தமக்கு ஆதரவு வழங்கியுள்ளதாகவும், எனவே அதனைத் தான் நிறைவேற்றுவேன் என திட்டவட்டமாகக் கூறியுள்ளார். அத்துடன் நாடாளுமன்றத்தில் தனக்கு பெரும்பான்மை ஆதரவு தொடர்ந்தும் இருப்பதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

# இல. பூராகவும் நேற்று முன்தினம் நீதிபதிகள் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

பிரதம நீதியரசருக்கு எதிராக குற்றவியல் பிரேரணையைக் கொண்டு வருவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையைக் கண்டித்து யாழ். மாவட்ட நீதிபதிகள் எவரும் நேற்று முன்தினம் கடமைக்குச் சமுகமளித்திருக்கவில்லை.

நீதிச் சேவைச் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு இது தொடர்பாக கடந்த செவ்வாய்க்கிழமை எடுத்த முடிவின் பேரிலேயே மாவட்ட நீதிபதிகள் கடமைக்கு சமுகமளித்திருக்கவில்லை.

பாதுகாப்பு அமைச்சின் அதிகாரம் தொடர்பாக அரசியல் யாப்பில் உள்ள சட்ட விதிகள் குறித்து உயர் நீதிமன்றத்தில் சனாதிபதி ஆலோசனையைக் கேட்டு அது தொடர்பான தீர்ப்பை அறிவிப்பதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்கு எதிராகக் குற்றப் பிரேரணையைக் கொண்டு வருவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையைக் கண்டித்தே நீதிபதிகள் நீதிமன்றிற்கு சமுகமளிக்கவில்லை.

### -நாவாந்துறையிலுள்ள-

# கடற்கரை ஓரக் காவலரண்கள் பலப்படுத்தும் முயற்சியில் படையினர்

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறையில் உள்ள கடற்கரை ஓரக் காவல் நிலைகளைப் பலப்படுத்தும் முயற்சியில் படையினர் ஈடுபட்டு வருகின்றனர். மேற்படி பகுதியில் இதுவரை காலமும் கைவிடப்பட்டிருந்த காவல் அரண்கள் புதுப்பிக்கப்பட்டு அதில் படையினர் காவல் கடமையில் ஈடுபட்டதுடன் அப்பகுதிக் கடலில் கடற்படைப் படகுகள் விசேட ரோந்து நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். (33)

# தீவக சிற்றூர்திச் சேவையினருக்கும் படையினருக்குமிடையில் முறுகல்

யாழ்ப்பாணம் மற்றும் தீவகப் பகுதிக்கிடையான சிற்றூர்திச் சேவையை வழங்குபவர்களுக்கும் அல்லப்பிட்டி சோதனைச் சாவடிப் பகுதியில் கடமைபுரியும் பொலிஸ் காரருக்குமிடையே முறுகல் நிலை நாளாந்தம் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சோதனைச் சாவடியில் தாம் குறிப்பிடும் இடத்தில் மட்டுமே வாகனங்களை நிறுத்த வேண்டும் எனவும் தமது தடை முகாமை அண்மித்து வாகனங்களை நிறுத்தக் கூடாதெனவும்படையினர் எச்சரித்துள்ளதுடன் கடும் சோதனைகளையும் தேவையற்ற விசாரணைகளையும் இங்கு கடமையாற்றும் பொலிசார் செய்வதாலேயே இம்முறுகல்நிலை ஏற்பட்டு வருகிறது. (33)

### -அணுவாயுதத் தயாரிப்பிற்கு-

# வடகொரியாவிற்கு பாக்.உதவி மறுக்கிறார் முசாரப்

(இஸ்லாமாபாத்)

அணுவாயுதங்களை வடிவமைப்பதற்குத் தமது நாடு வடகொரியாவிற்கு உதவியதாக வெளியான தகவல்களை பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப் நிராகரித்துள்ளார்.

கடந்த காலத்தில் வடகொரியாவுடன் இராணுவ ரீதியான ஒத்துழைப்புக் காணப்பட்டாலும் தற்போது நீக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

# பாக்-இந்.படையினர் மோதல் 3 தீவிரவாதிகள் சுட்டுக் கொலை

### -இந்தியா அறிவிப்பு

(புதுடில்லி)

காஷ்மீர் பகுதியில் தீவிரவாதிகளுக்கும் இந்தியப் படையினருக்குமிடையில் நேற்று இடம்பெற்ற சண்டையையடுத்துப் பாக்.படையினரும் இந்தியப் படையினரும் பரஸ்பரம் துப்பாக்கிச் சமரில் ஈடுபட்டுள்ளனர்.

தீவிரவாதிகளுடனான சண்டையில் மூன்று தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டதாக இந்தியப் படை அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்தியப்படையினருக்கும் பாக்.படையினருக்குமிடையே இடையிடையே பீரங்கித் தாக்குதல்களும் இடம்பெற்று வருகின்றன.

# கட்டுரைப் போட்டி

(அலுவலக செய்தியாளர்)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசையினை முன்னிட்டு கிளி.மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையில் ''நாவலர் ஒரு பல்துறை வித்தகர்'' எனும் தலைப்பில் கட்டுரைப்போட்டி நடாத்தப்படவுள்ளது.

கிளிநொச்சி திருநெறிக் கழகத்தினரால் எதிர்வரும் 20ஆம் திகதியன்று காலை 9.00 மணிக்கு கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரியில் மேற்படி கட்டுரைப்போட்டி இடம்பெறவுள்ளது.

மேற்படி போட்டிக்கு ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் ஒருவர் மட்டுமே கலந்துகொள்ள முடியும். இதற்கான விண்ணப்ப முடிவுத்திகதி 15.11.2003 ஆகுமெனவும் விண்ணப்பப்படிவங்கள் யாவும் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதென திருநெறிக்கழகத் தலைவர் மகாலிங்கம் (தமிழ் ஐயா) தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலதிக விபரங்கள் பெறவிரும்பின் திருநெறிக் கழகத் தலைவர்/செயலர், 224, திருநகர், கிளிநொச்சியுடன் தொடர்புகொள்ளும் வண்ணம் வேண்டியுள்ளார். (சோ)

# கொபி அனான் நம்பிக்கை

(நியூ யோர்க்)

சிறிலங்காவின் அமைதி முயற்சிகளுக்கு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நடவடிக்கைகளால் ஊறுஏற்படாதென நம்புவதாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கொபி அனான் தெரிவித்துள்ளார்.

# சிறிலங்காவிற்கு செல்வதை மக்கள் தவிர்க்க வேண்டும்

### பிரிட்டன் அரசு கோரிக்கை

(லண்டன்)

சிறிலங்காவிற்கு செல்வதை பிரித்தானிய மக்கள் தவிர்க்க வேண்டுமென பிரித்தானிய அரசு தமது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. சிறிலங்காவில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் பிரித்தானியாவிடுத்துள்ள வேண்டுகோளில் தெரிவித்துள்ளது. (32)

# போ. ஆணையாளரின் அனுமதி பெற்றே யாழ். இல் பதிவுகளை மேற்கொள்க

(அலுவலக செய்தியாளர்)

யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள நடமாடும் சேவையில் 02.11.2003 அன்று செயலகத்திற்கு சமுகமளித்து பதிவுகளை மேற்கொள்ள முடியாத நிலையில் மோட்டார் போக்குவரத்து ஆணையாளரின் அனுமதியின் கீழ் உரிய அதிகாரிகளிடம் ஒப்பம் பெற்றுச் சென்ற வாகன உரிமையாளர்களின் வாகனப் பதிவுகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் எதிர்வரும் 10ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை நடைபெறவுள்ள பதிவுகள் மேற்கொள்ளும் நடவடிக்கையில், போக்குவரத்து ஆணையாளரின் அனுமதியின் கீழ் உரிய அதிகாரிகளிடம் 02-11-2003 அன்று ஒப்பம் பெற்றுச் சென்ற வாகன உரிமையாளர்கள், வாகனங்கள் இன்றி யாழ். மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு சமுகமளித்து வாகனப் பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் வி. பத்மநாதன் கேட்டுக் கொண்டுள்ளார். (சோ)

# யூனியன் கல்லூரி மாணவர்களிடம் இராணுவ அ. அட்டை கோரும் படையினர்

பாடசாலைக்கு வரும்போது இராணுவ அடையாள அட்டையும் எடுத்துவரப்பட வேண்டும் என தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மாணவர்களுக்கு படையினர் வலியுறுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ அதி உயர் பாதுகாப்பு வலயத்துள் மேற்படி பாடசாலை இயங்கி வருவதைக் காரணம் காட்டி பலவகை நெருக்குவாரங்களையும் மேற்படி பாடசாலை மாணவர்கள் மீது திணித்து வரும் படையினர், கடந்த இரு நாட்களாக மேற்படி அறிவுறுத்தலை பிறப்பித்து வருவதால் ஒப்பந்தத்தின் பின் மீளக் குடியேறி வாழும் இப்பாடசாலை மாணவர்களிடம் இவ் அடையாள அட்டையில்லாததால் பாடசாலை செல்ல முடியாத அபாயம் ஏற்பட்டுள்ளதாக மாணவர் தரப்பு கவலை தெரிவிக்கின்றது.

# தப்பிஓட முற்பட்ட கைதிகளில் இருவர் சுட்டுக் காயம்

(அம்பாறை)

அம்பாறையில் தப்பியோட முற்பட்டபோது பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு கைதிகள் காயமடைந்துள்ளனர்.

மேலும் மூன்று பேரை மட்டக்களப்பு நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லும்வேளை சிறைச்சாலை உத்தியோகத்தர்களது ஆயுதங்களைப் பறித்து தப்பியோட முற்பட்டபோது இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

காயமடைந்தவர்களில் ஒருவர் விசேட அதிரடிப்படையிலிருந்து தப்பியோடியவர் என்று தெரிவிக்கப்படுகிறது. சிறுவர் கடத்தல் துஷ்பிரயோக சம்பவம் தொடர்பாக மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளே இம்மூவருமாகும்.

### -அரசியல் நெருக்கடி குறித்து-

# அமைச்சர்கள் பீரிஸ்,கருஜெயசூரிய வெளி.தூதுவர்களுக்கு விளக்கம்!

(கொழும்பு)

கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களை அமைச்சர்களான ஜீ.எல்.பீரிசும் கருஜெயசூரியவும் நேற்றுச் சந்தித்துத் தற்போதைய அரசியல் நெருக்கடி நிலை குறித்து விளக்கமளித்துள்ளனர்.

இந்த நெருக்கடி நிலையில் தமது கட்சியின் நிலைப்பாட்டைத் தூதுவர்களுக்கு இவர்கள் இச்சந்திப்பின் போது விளக்கிக் கூறியுள்ளனர்.

சர்வதேச சமூகம் மத்தியில் தமது செல்வாக்கை ஸ்திரப்படுத்திக் கொள்ளும் நோக்கோடு இச்சந்திப்பு இடம்பெற்றது. (32)

# ஈராக்கில் இரசாயன ஆயுத விவகாரம் முடிந்துவிட்டதாகக் கூறமுடியாது

### -ரஷ்யா அறிவிப்பு

(வாஷிங்டன்)

பேரழிவு தரும் ஆயுதங்கள் பற்றி ஆராய்வதற்காகச் சர்வதேச ஆயுதக் கண்காணிப்பாளர்கள் மீண்டும் ஈராக் திரும்ப வேண்டும் என்ற யோசனையை அமெரிக்கா நிராகரித்துள்ளது.

தமது நாடு மேற்கொண்ட படையெடுப்பு அதற்கான தேவையை இல்லாமல் செய்துள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். அத்துடன் ஈராக்கில் உயிரியல், இரசாயன,அணுவாயுதங்கள் பற்றிய பிரச்சினைகள் முடிந்துவிட்டதாகக் கருதமுடியாது. ஐ.நாடுகள் அணுவாயுதக் கண்காணிப்பு அமைப்புக்கள் ஆயுதங்கள் இல்லையென அறிவித்த பின்னரே இது தொடர்பான தீர்மானத்திற்கு வரமுடியுமென ரஷ்யா கூறியுள்ளது.

# அமெரிக்கா தாய்வானுடன் இராஜதந்திர உறவைப் பேணக் கூடாது

### சீனா வலியுறுத்து

(வாஷிங்டன்)

ஒரே சீனா என்ற கொள்கைக்கான அமெரிக்காவின் ஆதரவை வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் வலியுறுத்தியுள்ளார்.

தாய்வான் சனாதிபதியுடன் கைகுலுக்கல் சம்பவம் நடைபெற்று இரண்டு நாட்களுக்குப் பின்னர் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பனாமா சுதந்திரம் அடைந்து 100 வருடங்கள் நீடிப்பதை முன்னிட்டு நடைபெற்ற வைபவம் ஒன்றிலேயே இருவரும் சந்தித்தனர். இவ்விடயம் சீனாவை ஆத்திரமூட்டவைத்துள்ளது. தாய்வான் என்பது சீனாவின் ஒரு பகுதி என்பதே பீஜிங் அரசின் நிலைப்பாடாகும். அதனை மீறும் வகையில் அமெரிக்கா தாய்வானுடன் இராஜதந்திர உறவுகளைப் பேணக் கூடாதென சீனா கருதுகிறது.

அமெரிக்கா 1979 ஆம் ஆண்டின் நிலையை ஆதரிக்கும் கொள்கையை அங்கீகரித்துள்ளது. ஆனால் தாய்வான் உடன் உத்தியோகபற்றற்ற உறவுகளைப் பேணுவதாகவும் அறிவித்துள்ளது.

# 3 அமைச்சுக்களையும் சனாதிபதி மீண்டும் கையளிக்க வேண்டும்

## அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானம்

(கொழும்பு)

அமைச்சர் கரு ஜெயசூரிய தலைமையில் நேற்று முன்தினம் அமைச்சரவைக் கூட்டம் இடம்பெற்ற போது அதில் முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பீரிஸ் கூறியுள்ளார்.

சனாதிபதி கையேற்ற மூன்று அமைச்சுக்களும் மீள கையளிக்கப்பட வேண்டும். பாராளுமன்றம் உடனடியாகக் கூட்டப்பட்டு வரவு-செலவுத் திட்டம் திட்டமிட்டபடி சமர்ப்பிக்க வழி செய்ய வேண்டும் என்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் நாட்டின் பாதுகாப்பிற்கும் சட்டம், ஒழுங்கிற்கும் ஒரு பாதிப்பும் இல்லை. வேண்டுமென்றே அவசர காலச் சட்டம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. இது குறுகிய அரசியல் நோக்கத்திற்காக ஏதேச்சையாக எடுத்த அதிகார துஷ்பிரயோகமாகும் என்றும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

# சந்திரிகாவின் செயல் குறித்து ஐரோ. யூனியன் அதிருப்தி!

இலங்கை அரசாங்கத்தின் அமைச்சர்கள் பலரை பதவியிலிருந்து நீக்கி கொழும்பில் மீண்டும் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்காக துருப்புக்களை குவிக்க உத்தரவிட்டுள்ள சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நடவடிக்கைகளைக் கண்டித்து ஐரோப்பிய யூனியன் தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது. தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான முயற்சிகளுக்கு ஆதாரமாக விளங்குகின்ற சனாதிபதி, பிரதமர், அமைச்சவை அங்கத்தவர் ஆகியோருக்கிடையிலான நல்லுறவும் இணக்கப்பாடும் இதன் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நிலை ஏற்படலாம் என்றும் ஐரோப்பிய யூனியன் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# சனாதிபதியின் நடவடிக்கைகள் சமாதான விரோத செயற்பாடாகும்

**- யாழ்.பல்கலை வவுனியா வளாக மாணவர்**

(செட்டிகுளம்)

அரசியல் இலாபம் என்ற ஒரே நோக்கை அடிப்படையாகக் கொண்டு சனாதிபதி சந்திரிகா குமாரங்க எடுத்துள்ள நடவடிக்கை ஒரு சமாதான விரோதச் செயலாகும் என யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சனாதிபதியின் இச் செயற்பாடுகள் இது நாட்டின் சமாதானத்தை விரும்பும் ஒவ்வொரு மக்கள் மத்தியிலும் விசனத்தையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளதோடு எல்லாரிடமும் யுத்தம் பற்றிய ஒரு பய உணர்வையும் ஏற்படுத்தியுள்ளது. சனாதிபதியின் இச்செயலானது ஒரு சமாதான விரோதச் செயற்பாடாகவேயன்றி இச்சூழலில் எந்த அளவிற்கும் பொருத்தப்பாடுடையதாகவோ நன்மை பயக்குவதாகவோ அமையவில்லை. எனவே சனாதிபதியால் மேற்கொள்ளப்படும் தன்னிச்சையான முடிவுகளை நிறுத்துமாறு கேட்டுக்கொள்வதோடு இச் செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (21)

# வரவு-செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படாவிடின் ஊழியர் சம்பளம், ஓய்வூதியம் வழங்க முடியாது

**- பிரதியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவிப்பு**

அரசாங்க ஊழியர்களுக்கும், ஓய்வூதியம் பெறுவோருக்கும், சமுர்த்தி கொடுப்பனவைப் பெறுவோருக்கும் அடுத்த சனவரி மாதம் முதல் கொடுப்பனவுகளை வழங்க முடியாதிருக்கும் எனப் பிரதி நிதியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். வரவுசெலவுத் திட்டத்தை எதிர்வரும் 12ஆம் திகதி சமர்ப்பிக்க முடியாமையால், இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். எனவே பிரதமர் நாடு திரும்பியதும் நாடாளுமன்றத்தை எதிர்வரும் 12 ஆம் திகதியே கூட்டி வரவுசெலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். இதேவேளை பிரதமருக்கு ஆதரவு தெரிவித்து 131 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டிருப்பதாக அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

### அமெ.வில்...

அலரி மாளிகை வரை மோட்டார் பவனியில் அழைத்துவரப்படவுள்ளார். இதேவேளை, பிரதமர் நடை முறைப் பிரச்சினை தொடர்பில் சனாதிபதியுடன் பேச்சு நடத்த விரும்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (32)

### தேசிய...

கார அமைச்சர் அஸ்வர் தெரிவிக்கையில் தேசிய அரசு அமைப்பது பற்றி எனக்குத் தகவல் எவையும் கிடைக்கப் பெறவில்லை. இது பற்றிய அழைப்புக்கள் எவையும் சனாதிபதியிடமிருந்தோ அவருடைய கட்சியிடமிருந்தோ உத்தியோகபூர்வமாக எமக்குக் கிடைக்கவில்லை. இவ்வாறானதொரு அழைப்பு தமிழ் கட்சிகள் உள்ளிட்ட ஏனைய கட்சிகளுக்கும் விடுக்கப்பட்டதாக இல்லை. அவ்வாறானதொரு அழைப்பு விடுக்கப்பட்டால் அப்போது நாங்கள் எமது தோழமைக்கட்சிகளோடு ஒன்று சேர்ந்து அதனைப்பற்றி ஆலோசிப்போம் என்றார்.

தற்போது இரண்டுவார காலத்திற்கு நாடாளுமன்றம் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள நிலையில் நீங்கள் இப்போது நாடாளுமன்றத்தின் மூலமாக என்ன செய்யமுடியுமென நினைக்கிறீர்கள்? என அஸ்வரைபி.பி.ஸி. தமிழோசைச் செய்தியாளர் கேட்டபோது 19ஆம் திகதி நாடாளுமன்றம் மீண்டும் கூட்டப்பட வேண்டும். சனாதிபதிவந்து உரை நிகழ்த்தி சபையைத் தொடக்கிவைப்பார். அல்லது சபாநாயகர் மூலமாக ஒரு அறிவித்தலை அவர்கள் விடுத்து சபையைக் கூட்டுவார்கள் சபையைக் கூட்டிய உடனே ஐ.தே. முன்னணி அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இருக்கிறது என்ற பிரேரணையைக் கொண்டுவந்து அதனை நாங்கள் நிறைவேற்ற நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம் என்றார்.

# நியூசிலாந்து வெற்றி

இந்தியாவில் நடைபெறும் ரி.வி.எஸ் கிண்ணத்துக்கான முத்தரப்புக் கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்து அணி நேற்றுத் தனது முதலாவது வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

இந்திய அணியுடன் கட்டாக் நகரில் நடைபெற்ற பகல்-இரவு ஆட்டத்தில் 4 விக்கெட்டுக்களால் இந்த வெற்றியை ஈட்டியது. முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 9 விக்கெட் இழப்புக்கு 246 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 47.3 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 249 ஓட்டங்களைப் பெற்றது. மக்மிலன் ஆட்டம் இழக்காது 82 ஓட்டங்களைப் பெற்றார்.

# வீடு புகுந்து திருட முயன்றோரிடமிருந்து துப்பாக்கி கைப்பற்றப்பட்டது

## 6 மாதங்களுக்குமுன் திருடப்பட்டதென அறிவிப்பு

(செட்டிகுளம்)

ஆறுமாதத்திற்கு முன்னர் வவுனியா செக்டர் I பகுதியில் காணாமல் போன ரி-56 ரக துப்பாக்கி வவுனியா மன்னார் 4ஆம் கட்டைப் பகுதியில் திருடச் சென்ற ஒருவரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளது.

வியாழன் அதிகாலை 2.00 மணியளவில் வவுனியா மன்னார் வீதியின் 4ஆம் கட்டைப் பகுதி வீடு ஒன்றின் உட்புகுந்து கொள்ளை அடிக்க முற்பட்டுள்ளார். இதனையடுத்து வீட்டில் இருந்த இளைஞர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் வீட்டின் உரிமையாளர் காயமடைந்து வவுனியா பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கள்வரால் கைவிடப்பட்ட ரி-56 ரக துப்பாக்கி மன்னார் வீதி செக்டர் I பகுதியில் 6மாதங்களுக்கு முன்னர் காணாமல் போன துப்பாக்கி என்று வவுனியா பொலிசார் தெரிவிக்கின்றனர்.

அண்மை நாட்களாக வவுனியாவில் இடம்பெற்ற கொள்ளை சம்பவங்களுக்கு இந்தத் துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (21)

### சமாதான...

அமெரிக்காவிற்குமிடையில் ஒருவித நெருக்கம் ஏற்பட்டுள்ளது என்று கூறலாம் என சிறிலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று பி.பி.ஸி.க்கு வழங்கிய பேட்டியின்போது தெரிவித்தார்.

மேலும் சில கேள்விகளுக்கு பிரதமர் அளித்த பதில்கள் வருமாறு:

கேள்வி: இலங்கையில் தற்போது ஏற்பட்டிருக்கும் அரசியல் சூழ்நிலையில் உங்களது அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?

பதில்: சமாதான முயற்சிகள் தோல்வியடைய நான் ஒருபோதும் இடங்கொடுக்கமாட்டேன். நான் கொழும்பு சென்றவுடன் தேவையான அனைத்தையும் செய்து சமாதான முயற்சிகள் தொடருவதற்கு ஏற்பாடு செய்வேன். நான் கொழும்பு சென்றவுடன் அமைச்சர்களையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்துத் தேவையான முடிவுகளை எடுப்பேன்.

கேள்வி: சட்ட வழிகள் உங்களுக்கு அடைக்கப்பட்டுள்ளது போல் தெரிகிறது. நீங்கள் இதற்கு என்ன செய்யப்போகிறீர்கள்?

பதில்: எனக்குரிய சட்டவழிகள் மூடப்பட்டதாக நான் நினைக்கவில்லை. நான் கொழும்பு சென்றதும் இது பற்றி விவாதிப்பேன. இதெல்லாம் இலங்கையில் நடைபெறும் விடயங்கள் தானே.

கேள்வி: இலங்கை அரசியல் யாப்பின்படி பார்த்தால் சனாதிபதியின் கைமேலோங்கியுள்ளது போல் தெரிகிறது. இதை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள்?

பதில்: அது பற்றி இப்போது எனக்கு ஒன்றும் தெரியவில்லை. நாங்கள் கொழும்பு சென்றவுடன் அதை சரிசெய்வோம். இது மாதிரி விடயமெல்லாம் இலங்கையில் வருடத்திற்கு இரு தடவை நடைபெறும் விடயங்களே. வட-கிழக்கு பருவ மழை போலவும் தென்மேற்கு பருவ மழை போலவும் நடைபெறும் விடயங்களே என்றார்.

# சந்திரிகாவிற்கு ஆதரவு தெரிவித்து ஜே.வி.பி. ஆர்ப்பாட்டம்

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு ஆதரவு வழங்குமுகமாக இன்று கொழும்பில் பொது ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளது. மூன்று அமைச்சுக்களையும் போறுப்பேற்றதை ஜே.வி. பி. பாராட்டியதோடு சனாதிபதியின் அரசியல் நடவடிக்கையோடு சேர்ந்து ஈடுபட ஆயத்தம் எனத் தெரிவித்துள்ளது. பிரதமரையும் தமிழீழ விடுதலைப்புலிகளையும் தோற்கடிக்க நாங்கள் தயாராகவுள்ளோம். அதனால் அரசியல் மாற்றங்கள் தற்போது அவசியமென நாங்கள் நினைக்கிறோம் என ஜே.வி.பி.செயலாளர் விமல்வீரவன்ச கூறினார்.

# குடாநாட்டில் இராணுவ ரோந்து சோதனை நடவடிக்கை அதிகரிப்பு!

(யாழ்ப்பாணம்)

சனாதிபதியின் அவசர கால நிலைப் பிரகடனத்தைத் தொடர்ந்து யாழ். குடாநாட்டிலும் விசேட சோதனை மற்றும் ரோந்து நடவடிக்கைகள் படையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நேற்றைய தினம் நடைபெற்ற இந்நடவடிக்கைகளின போது யாழ். நகரில் உள்ள சகல பிரதான சந்திகளிலும் படையினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் சாவகச்சேரி, பருத்தித்துறை மற்றும் தீவகப் பிரதேசங்களிலும் இந்நடவடிக்கைகளில் படையினர் ஈடுபட்டனர்.

தென்மராட்சி, வலிகாமம், தீவகம், வடமராட்சி ஆகிய பிரதேசங்களில் படையினர் விசேட பீல்ட்பைக் ரோந்துகளிலும் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (33)

## - சனாதிபதியின் நடவடிக்கைகளைத் தொடர்ந்து -

# யாழ்.குடாநாட்டு புனர்வாழ்வு நடவடிக்கைகள் இடை நிறுத்தம்!

(யாழ்ப்பாணம்)

சனாதிபதியின் அதிரடி நடவடிக்கைகளினால் நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் பதற்ற நிலையைத் தொடர்ந்து திறைசேரியின் நிதி வழங்கலை நம்பி யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டு வந்த புனர்வாழ்வு நடவடிக்கைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

சனாதிபதி தனக்குள்ள அரசியல் அதிகாரங்களைப் பயன்படுத்தி பாதுகாப்பு, உள்துறை, மக்கள் தொடர்பாடல் போன்ற அமைச்சுக்களையும் அது சார் கட்டமைப்புக்களையும் தன் கட்டுப்பாட்டின் கீழ் கொணர்ந்து மாற்றங்களைச் செய்து வருவதனைத் தொடர்ந்து திறைசேரியும் அவரது கட்டுப்பாட்டுக்குள் சென்றுவிடலாம் என்ற சாத்தியப்பாடுகள் தோன்றியுள்ளதைத் தொடர்ந்து இவை இடை நிறுத்தப்பட்டுள்ளன.

இதனால், அமைச்சர்களூடாக செய்யப்பட்டு வரும் இந்நிதி வழங்கலை நம்பி புனர்நிர்மாண நடவடிக்கைகளில் ஈடுபட்டோர் பெரும் அவதியை எதிர்கொண்டுள்ளனர். (33)

### அமைச்சரவைப்...

வந்துள்ளதால் அமைச்சரவைப் பேச்சாளர் பதவியில் ஜீ.எல். பீரிஸ் தொடர்கிறாரா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

### சனாதிபதி...

தனது நாட்டுக்கு விஜயம் செய்திருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் அமெரிக்க சனாதிபதி புஷ் அமெரிக்காவின் ஒத்துழைப்பை வெளிப்படுத்தியுள்ளார். பிரதமரின் தலைமைத்துவம் சமாதான முயற்சியில் காட்டப்படும் அர்ப்பணிப்புத் தொடர்பாக அமெரிக்க சனாதிபதி வலுவான ஆதரவைத் தெரிவித்தாரென்று கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது.

### அவசர...

சென்று மக்களுக்கு தெளிவுபடுத்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி நேற்றுத் தீர்மானம் எடுத்துள்ளது.

இதேவேளை, அவசர காலநிலை குறுகிய காலத்தை அடிப்படையாகக் கொண்டது. எனவே இதனை வெளிநாடுகளின் தூதுவர்கள் தமது நாடுகளுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என சனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளதாக நேற்றுச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. எனினும் இந்த அறிவித்தல் நிதி அமைச்சின் கடிதத் தலைப்பிலே வெளியாகியுள்ளது. இது தொடர்பில் சனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் ஜனதாஸ பீரிஸ் குறிப்பிட்டுகையில், இந்தச் செய்தி தொடர்பில் வெளிநாட்டு அமைச்சுக்கு ஏற்கனவே தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறினார். எனினும் நிதி அமைச்சின் கடிதத் தலைப்பில் இந்த அறிவித்தல் வெளியாகியுள்ளமை குறித்த அவர் கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை. (32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 07ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.